பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 212

வெள்ளிக்கிழமை
27 ஜூன் 2025

ஆனி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

**நவம்பர் மாதத்தில் உயர்தரப் பரீட்சை**

விரிவு பக்:- 11



# உள்நாட்டுப் பொறிமுறை; நம்பவில்லை தமிழர்கள்!

## வோல்கர் ட்ரக் வெளிப்படை!

**கொழும்பு, ஜூன் 27**

**இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறையை பாதிக்கப்பட்ட மக்கள் எவரும் நம்பவில்லை. ஆதலால்தான் இந்த விடயத்தில் சர்வதேசப் பொறிமுறையை அவர்கள் கோரினார்கள். எனவே, சர்வதேசத்தின் இறுக்கமான நியமங்களின் அடிப்படையிலேயே இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படவேண்டும் - இவ்வாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் தெரிவித்துள்ளார்.**

11

## பயங்கரவாதத் தடைச்சட்டம் உடன் நீக்கப்பட வேண்டும்!

### அரசிடம் வலியுறுத்தினார் வோல்கர்

கொழும்பு, ஜூன் 27

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மிக விரைவாக நீக்குமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளேன் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக்

11

## தண்ணீர்த் தொட்டியிலிருந்து இளைஞரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில் உள்ள ஆள்களில்லாத வீட்டுத் தண்ணீர்த் தொடர்டியிலிருந்து இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம்

11

## கடற்றொழிலுக்குச் சென்ற மீனவரைக் காணவில்லை!

### கட்டுமரம் மீட்பு; தேடல் தீவிரம்!



யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு மணற்காடு பகுதியில், நேற்று அதிகாலை கட்டுமரத்தில் மீன்பிடிக்குச் சென்ற மீனவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆ.ஆனதாஸ் (வயது- 38) என்ற மீனவரே இவ்வாறு காணாமற்

11

## புதையல் தோண்டியோர் புதுக்குடியிருப்பில் கைது

முல்லைத்தீவு, ஜூன் 27

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாணிக்கபுரம் கிராமத்தில் புதையல் தோண்டிய நான்கு பேர் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ள

11

### வளர்ப்பு மீன்களைப் பிடிக்க முயன்றபோது

## கிணற்றில் வீழ்ந்து சிறுவன் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 27

அச்சுவேலி - தோப்பு பகுதியில் கிணற்றில் விழுந்து சிறுவனொருவன் நேற்று உயிரிழந்துள்ளான். பிரதீபன் தஸ்வின் (வயது- 10) என்ற சிறுவனே இவ்வாறு

11

## செம்மணிப் புதைகுழிக்குள் மேலும் மூன்று சிதிலங்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில் உள்ள சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அகழ்வுப் பணிகள்

11

## நாடாளுமன்ற உறுப்புரிமை வழக்கில் அர்ச்சுனா எம்.பி.யின் பதவிக்கு ஆப்பு?

கொழும்பு, ஜூன் 27

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், தொடர்ந்தும் அந்தப் பதவியை வகிப்பதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. அர்ச்சுனா இராமநாதன், தனது மருத்துவ அதிகாரிப் பதவியை இராஜினாமா

11

## தடம்புரண்டது எரிபொருள் பவுஸர்; பல்லாயிரம் லீற்றர் டீசல் விரயம்!

### நிலத்தில் வழிந்தோடிய டீசலை அள்ளிச் சென்றனர் மக்கள்

கிளிநொச்சி, ஜூன் 27

கிளிநொச்சி குடமுருட்டி பாலத்துக்கு அருகில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எரிபொருள் பவுசரொன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

11




**முச்சந்தி முரளி**

'குடுக்கிற பவுஸர் குப்பிறக் கவிண்டும் டீசலைக் குடுக்கும் போல'



## நயினை நாகபூஷணிக்கு நேற்றுக் கொடியேற்றம்!

மன்னார், ஜூன் 27

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழாவின் கொடியேற்றம் நேற்று வியாழக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொவிசெத**
திகதி 26.06.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4114
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 03 19 69 75
விசேட எழுத்து L

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 26.06.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1181
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 30 47 57 60

**NLB ஜய**
திகதி 26.06.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0140
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 3 5 0 2

**மெகா பவர்**
திகதி 26.06.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2220
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 15
வெற்றி இலக்கங்கள் 04 18 60 62

**மஹஜன சம்பத**
திகதி 26.06.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5872
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 8 1 3 9 4 3

**தன நிதானய**
திகதி 26.06.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1902
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 24 25 27 41
விசேட எழுத்து L

**அத சம்பத**
திகதி 26.06.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0447
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 3 9 4 3

# அத்துமீறிக் குடியேறியவர்களுக்கு முல்லைக் கடற்பரப்பில் இடமில்லை

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**முல்லைத்தீவு, ஜூன் 27**

**வெலிஓயாப் பகுதியில் அத்துமீறிக் குடியேறியுள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு முல்லைத்தீவுக் கடற்கரைப்பகுதிகளில் கடற்றொழில் மேற்கொள்ள இறங்குதுறை வழங்கமுடியாது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் அபகரித்த தமிழ் மக்களின் காணிகளை, மீளவும் தமிழ் மக்களிடம் ஒப்படைத்துவிட்டு பெரும்பான்மை இனத்தவர்கள் அங்கிருந்து வெளியேறவேண்டும். வெலிஓயாப் பிரதேசத்தில் தமிழ் மக்களின் காணிகளை அபகரித்துக்கொண்டு அங்கு அத்துமீறிக் குடியிருக்கின்ற பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்களும் கடற்றொழில் செய்வதற்கு இறங்குதுறை கேட்டால், கடலைப் பிரதானமான வாழ்வாதாரமாக நம்பிவாழும் கடற்றொழிலாளர்கள் எங்கு செல்வது? எனவே அவர்களுக்கு நாயாற்றில் இறங்குதுறையை வழங்குவதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது - என்றார். (ச-26)

**சுபிரி தன சம்பத**
திகதி 26.06.2025 — தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0580
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கம் 9 7 2 4 9 8

**Super Ball**
திகதி 26.06.2025 — தினம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2846
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 21 26 56 66

**சனிதா**
திகதி 26.06.2025 — தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கம் 19 64 69 80
வெற்றி வாரம் 5007

**SASIRI**
திகதி 26.06.2025 — தினம் வியாழக்கிழமை
வெற்றி வாரம் 0712
வெற்றி இலக்கம் 06 42 49

**லக்ன ராசி**
திகதி 26.06.2025 — தினம் வியாழக்கிழமை
சம்மம் (symbol)
வெற்றி இலக்கம் 10 37 38 57
சீட்டிழுப்பு வாரம் 4558

**KAPRUKA**
திகதி 26.06.2025 — தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து D
சுப்பர் இலக்கம் 30
வெற்றி இலக்கம் 03 13 34 45
வெற்றி வாரம் 2022

**அத கோடிபதி**
திகதி 26.06.2025 — தினம் வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கம் 07 12 34 59
வெற்றி வாரம் 2672

# சர்வதேசத்திடமே எமக்கான நீதி!

## காணாமலாக்கப்பட்டோரின் சங்கம் ஐ.நா. ஆணையாளரிடம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 27

சர்வதேசம் தலையீடு செய்வதன் மூலமே எமக்கான நீதியைப் பெற்றுத் தரமுடியும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர்ரக்கிடம் வலியுறுத்தினோம் என்று வடக்கு- கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் புலம் பெயர்தலுக்கான அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்துக் கலந்துரையாடினோம். சர்வதேச நீதியில் எமக்கான நீதியைப் பெற்றுத் தர எமக்கு ஆதரவு நல்கவேண்டும். மனிதப் புதைகுழி தொடர்பிலும் எமக்கான நீதி மறைக்கப்படுகின்றது - மறுக்கப்படுகின்றது. எங்களுடைய போராட்டங்கள் இராணுவப் புலனாய்வின்மூலம் உளவியல்ரீதியாகக் கட்டுப்படுத்த முனைப்புகள் காட்டப்படுகின்றன. இந்த அரசாங்கம் எமக்கான தீர்வைப் பெற்றுதராது. அனைத்து அரசாங்கங்களைப்போலவே இந்த அரசும் செயற்படுகின்றது என்று சுட்டிக்காட்டினோம். அவர் எமது கோரிக்கைகளுக்குத் திருப்திகரமான பதிலை வழங்கினார் - என்றார். (ச-125)

# சட்டவிரோதமான கடற்றொழில்; இதுவரை 118 பேர் யாழில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சட்டவிரோதமானமுறையில் கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபட்ட 118 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களிமிருந்து 17 லட்சத்து 30 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது என்றும் யாழ்.மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டக் கடற்றொழில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சட்டவிரோதமாகக் கடலட்டை எடுத்துச்செல்லல், ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல், அரியவகை கடல் உயிரினங்களைப் பிடித்தல், கடலட்டைப் பண்ணை விதிமுறைகளைமீறி இரவுநேரத்தில் கடலட்டைப் பண்ணைகளில் மூழ்குதல், அனுமதியற்ற கடலட்டைப் பண்ணைகள், மீன்பிடி அனுமதிகளை மீறுதல், சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தல் போன்ற 10 சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 118 பேருக்கு எதிராக 47 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டதுடன், 47 படகுகளும் கைப்பற்றப்பட்டன - என்றார். (எ-125)



# கடற்றொழிலாளர்களுக்கு விசேட காப்புறுதித்திட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்கு விசேட காப்புறுதித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். ஓய்வூதியம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும் என்று விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரி ஒருவர் யாழ்.மாவட்டக் கடற்றொழில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார். கடற்றொழில் பிரதியமைச்சரால் ஓய்வூதியம், காப்புறுதி தொடர்பாக தெளிவுபடுத்துமாறு கோரப்பட்டபோதே,

கடற்றொழில்சார் காப்புறுதியை நாம் ஆரம்பிக்கவுள்ளோம். காப்புறுதி தொடர்பான சட்டவரைவு ஒன்றை அமைச்சர் மூலம் அமைச்சரவையில் முன்மொழியவுள்ளோம். ஓய்வூதியம் முன்னரைவிட மேம்படைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச-125)

# சித்துபாத்தி மயானசபையினர் ஐ.நா.ஆணையருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக வருகைதந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்டர் ரக், செம்மணி சித்துபாத்தி வழக்குத் தொடுநரான மயான அபிவிருத்திச் சபையினரைச் சந்தித்தார்.

இதன்போது மயானசபையினரால் குறித்த பகுதியில் மேலும் மனித எச்சங்கள் இருக்கக்கூடும் என்ற அடிப்படையிலான ஆவணங்கள் மனித உரிமைகள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன் செம்மணியில் மேற்கொள்ளப்படும் போராட்டத்தின் கோரிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தப்பட்டன.

இதுகுறித்த ஆவணங்கள் மேலும் இருப்பின் தனக்குச் சமர்ப்பிக்குமாறு மனித உரிமைகள் ஆணையாளர் வோல்டர் ரக் கேட்டுக்கொண்டாரென மயான அபிவிருத்திச் சபையின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக தன்சானியாச் சட்டம்

## ஆராய்கின்றது அரசாங்கம்

**கொழும்பு, ஜூன் 27**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு மாற்றீடாக தன்சானியாவில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்துவருகின்றது. இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று ஐ.நா. ஆதரவுடன் நடைபெற்றுள்ளது.**

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவைத் தயாரிக்கும் குழுவுக்குத் தலைமைவகிக்கும் ரியன்சி அர்செகுலரத்ன தலைமையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் ஐ.நா. பிரதிநிதிகளும் இணையம்மூலம் பங்குபற்றியுள்ளனர்.

நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தைத் தயாரிக்கும்பணியில் ஈடுபட்டுள்ள குழு உறுப்பினர்களான சட்டமாஅதிபர்திணைக்களத்தின் சிரேஷ்ட சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே, சாலிய பீரிஸ், வழக்கறிஞர் உப்புல் குமாரப்பெரும, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் பியுமந்தி பீரிஸ், கொழும்பைத் தளமாகக் கொண்ட ஐ.நா. அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தன்சானியாவில் 2002ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்தொடர்பாக இந்தக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஏ-6)

### யாழ்.மாவட்டத்தில்

## 2,743 இந்திய மீனவர்கள் 13 வருடங்களுக்குள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 27

கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் யாழ்.மாவட்டத்தில் 2 ஆயிரத்து 743 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2013 முதல் 2025 இதுவரையான காலப்பகுதியில் இந்திய இழுவைமடிப் படகுகள் எல்லைமீறிய குற்றச்சாட்டில் 486 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதன்போது 2 ஆயிரத்து 743 மீனவர்கள் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர்கள் பயணித்த 484 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

2014 ஆம் ஆண்டிலேயே அதிகளவில் 477 பேர் கைதுசெய்யப்பட்டனர். இதேவேளை இந்த வருடத்தின் இதுவரையில் 6 வழக்குகளின்கீழ் 43 பேரும் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டன - என்றார். (ச- 125)

## கடலோரப் பாதுகாப்புக்கு ஆளணி தேவை

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.மாவட்டத்தில் கடலோரப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவர் தேவை எனக் கடலோரப் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் கடற்றொழில் அமைச்சர் தலைமையில் இடம்பெற்றபோது, மீனவர்கள் பலர் கரையோரம் சார்ந்து பல விடயங்களையும் குற்றச்சாட்டுகளையும் முன்வைத்தனர். இதன்போது கடற்றொழில் அமைச்சர், யாழ்.மாவட்டத்தில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் என்ன செய்கின்றது? பிரச்சினைகள் தீராதவண்ணமே உள்ளன என்று வினவியபோதே கடலோரப் பாதுகாப்பு அதிகாரி மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார். (ச-125)

### இந்திய இழுவைப்படகுகளால்


## மீனவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் அறிக்கையிடல்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடக்கு மாகாணத்தில் இந்திய இழுவைமடிப் படகுகளால் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படும் விளைவுகள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளதாக நாரா நிறுவனப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ் . மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் மீனவர்கள் தற்போதும் தொடர்ச்சியாக இழுவைமடிகளின்மூலம் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் சமூகப் பொருளாதார நிலைகளின் பாதிப்புத் தொடர்பில் நாம் கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்துக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளோம் - என்றார். (ச-125)





## ‘ஒக்ஸ்போர்ட்’ அகராதியில் இலங்கைத் தமிழ்ச் சொற்கள்

கொழும்பு, ஜூன் 27

‘ஒக்ஸ்போர்ட்’ஆங்கில அகராதி தனது ஜூன் 2025 புதுப்பித்தலில் இலங்கைக்குத் தனித்துவமான தமிழ்ச் சொற்களைச் சேர்த்துள்ளது.

இதில் பிரதான சேர்க்கையாக கொத்துரொட்டி, வட்டலப்பம் உட்பட கிரிபத்,வளவ, மல்லுங், ஒசரி, பைலா, அஸ்வெடுமிஸ், பப்பரே போன்ற சொற்களும் இடம் பெற்றுள்ளன. இது உலக அரங்கில் இலங்கைத் தீவின் மொழியியல் மற்றும் கலாசார அடையாளத்துக்கு ஒரு குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தைக் குறிக்கிறது. இதே வேளை [illegible] (சின்னக்[illegible] (ச-6)




## அங்கை ஒரு நியாயம், இஞ்ச ஒரு நியாயமோ?

மூடைக்குள்ள போட்டுக்கட்டின நெல்லிக்காயை அவிட்டுக்கொட்டினால், எப்பிடிச் சிதறி ஓடுமோ அப்பிடி வீட்டுக்கட்சியின்ர ஒவ்வொரு கிளையும் சிதறத் தொடங்கிட்டு. உந்த உள்ளூராட்சி சபையில ஆட்சியைப் பிடிக்கிற விளையாட்டாலதான் இப்பிடி வீட்டுக்கட்சி திசைக்கொண்டாச் சிதறுதாம். முதலில இருந்தே கிளிநொச்சி தனி ஆவர்த்தனம்தான். அதோட அங்கத்தை வீட்டுக்கட்சி எம்.பி. அங்கத்தை ஆக்களை எல்லாம் தன்ர விசுவாசிகளாக வைச்சிருக்கிறதால, கட்சியின் மேல்மட்டம் அவரோட வாலாட்ட ஏலாமல் பம்மிக்கொண்டு கிடக்குது. அதால இந்தமுறை உள்ளூராட்சிசபைக்கு வீட்டுக்கட்சியின்ர சார்பில ஆரைத் தவிசாளராப் போடவேணும் எண்டு மாவட்டக்கிளை தீர்மானம் எடுத்திச்சோ. அவைக்கே அந்தப் பதவியளை குடுக்கலாம் எண்டு கட்சி மேலிடமும் பச்சைக்கொடி காட்டிப்போட்டுது.

ஆனால் மற்ற இடங்களில தங்களுக்கு வேண்டியவைக்குத்தான் தவிசாளர் பதவியைக் குடுக்கோணும் எண்டு கட்சி மேலிடம் உடும்புப்பிடியாக நிண்டிருக்குது. இதாலதான் இப்ப சிக்கல். கட்சியின்ர மேல்மட்டக்காரருக்கு கிளையில ஆருக்குச் செல்வாக்கு இருக்கெண்டும் தெரியாது. எந்த உறுப்பினருக்கு என்னென்ன சிக்கல்கள், பிரச்சினையள் இருக்கெண்டும் தெரியாது. தங்களுக்கு ஆரெல்லாம் செம்படிக்கினமோ, அவைக்குத்தான் பதவி. இதுதான் வீட்டுக்கட்சியின்ர இப்பத்தைய கொள்கை. சனத்துக்கு நல்லது செய்தவையையும், அந்த இடத்து ஆக்களிட்ட செல்வாக்கு உள்ளவையையும் வெட்டியாடி தங்கட ஆக்களை தவிசாளர் கதிரையில இருத்த, அப்புக்காத்தர் துடியாத் துடிக்கிறார். அப்பிடி அப்புக்காத்தர் நினைச்சமாதிரி, தனக்கு செம்படிக்கிறவைக்கு மட்டும்தான் தவிசாளர் பதவி எண்டால், அடுத்தமுறை வாக்குகள் இன்னும் குறையும். அதோட ஒவ்வொரு இடத்தில ஒவ்வொரு மாதிரியும் வீட்டுக் கட்சியின்ர விண்ணர்கள் விளையாட்டுக்காட்டுகினம்.

திருகோணமலை மாநகரசபை, பட்டினமும் சூழலும் பிரதேசசபையளில அங்க தெரிவுசெய்யப்பட்ட மெம்பர்மார் எல்லாருமாக் கூடிக்கதைச்சு, பொருத்தமான ஆக்களை தவிசாளராப் போடுறெதெண்டு, அவையின்ர பேரை தங்கட கையெழுத்துப்போட்ட கோரிக்கைக் கடிதத்தை கட்சி மேல்மட்டத்துக்கு குடுத்தவை. ஆனால் அப்புக்காத்தர் அதைக் கசக்கி எறிஞ்சி போட்டாராம். "ஆரைத் தவிசாளராப் போடோணும், ஆரோட கூட்டணி வைக்கோணும் எண்டதை நீங்கள் (வெண்ட மெம்பர்மார்) டிசைட் பண்ணேலாது. அதைக் கட்சி மேலிடம் தான் முடிவு செய்யும்" எண்டு மேலிடம் சொல்லியிருக்கு. ஆனால் இதுக்குமாறா முல்லைத்தீவில வீட்டுக்கட்சி நடந்திருக்காம். முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசசபையில ஆரைத் தவிசாளராப் போடோணும், ஆரைப் போடக்கூடாது எண்டு அங்கத்தைத் தொகுதிக்கிளைக்காரர் முடிவெடுத்து, அதை மேல்மட்டத்துக்கு அனுப்பிவைச்சிருக்கினம். மேல்மட்டத்துக்கு அனுப்பின கடிதங்களுக்கு என்ன நடக்குமெண்டு உங்களுக்குத் தெரியும்தானே. கிணத்தில போட்ட கல்லாவது சிலவேளை மேல வரும். ஆனால் வீட்டுக்கட்சியின்ர மேல்மட்டத்துக்குப் போட்ட கடிதங்களுக்குப் பதிலே வரேலை . பிறகு பார்த்தால் தவிசாளர் பதவிக்கு ஆரைப் போடக்கூடாது எண்டு தொகுதிக்கிளையும், மாவட்டக் கிளையும் தீர்மானம் எடுத்திச்சினமோ, அவரைத்தானாம் மேல்மட்டம் தவிசாளர் ஆக்கியிருக்கு. இப்பிடி தங்கட தீர்மானத்துக்கு மாறா என்னெண்டு முடிவெண்டுப்பீங்கள் எண்டு அந்த மாவட்ட எம்.பி. கேட்டிருக்கிறார். அதுக்கு " அந்த சபையில வெண்ட உறுப்பினர்மார் இவரைத்தான் தவிசாளாராப் போடச்சொல்லி கையெழுத்து வைச்சுத் தந்தவை. அதாலதான் போட்டம்"எண்டு கட்சி மேல்மட்டம் கதைவிட்டிருக்குது. திருகோணமலையில வெண்ட உறுப்பினர்மாரும், மாவட்டக் கிளையும் ஒரே முடிவெடுத்தால் அதை மறுக்கிற கட்சி மேலிடம், முல்லைத்தீவில வெண்ட உறுப்பினர்மார் கேட்டதால மாவட்டக் கிளையின்ர முடிவை மீறியிருக்கு. திருமலைக்கு ஒரு நியாயம், முல்லைத்தீவுக்கு இன்னொரு நியாயமோ? இப்பிடி தங்கட இஷ்டப்படி நடப்பினமெண்டால் கெதியில வீட்டுக்கட்சி அத்திபாரத்தோட பாறிவிழுந்திடும் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூர்களில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத் துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். துணிச்சலாக சில முடிவுகளை எடுப்பீர்கள். சகோதரவகையில் சுபச் செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் பணிச்சுமை குறைவதால், உற்சாகமாக இருப்பீர்கள்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படக்கூடும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**கன்னி:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டுக்குச்சென்றுவருவீர்கள். சிலருக்கு கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராதசெலவுகளும்ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத்தருவார். பிள்ளைகளின்விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்வீர்கள்.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாளாக இருக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.


**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். ஆனால், திடீர்ச்செலவுகளால் கையிருப்பு கரையும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மகரம்:** சிலருக்குக் குடும்ப விஷயமாக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டிவரும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும்.

## தொண்டைமனாறுக் கடலில் சங்கமித்த அணையாதீபம்



யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் செம்மணிப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட 'அணையா விளக்கு' போராட்டத்துக்காக ஏற்றப்பட்ட தீபம், யாழ்ப்பாணம் தொண்டமனாறு கடலில் விடப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்குச் சர்வதேச நீதிகோரியும், சர்வதேசக் கண்காணிப்புடனான அகழ்வை வலியுறுத்தியும் 'மக்கள் செயல்' எனும் தன்னார்வ இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் மாலையுடன் போராட்டம் நிறைவுக்கு வந்த நிலையில், மூன்று தினங்களாகத் தொடர்ச்சியாக அணையாத விளக்காக எரிந்து கொண்டிருந்த தீபம் வாகனத்தில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு தொண்டமனாறு கடலில் விடப்பட்டது. (ம-66)

## இம்மாத இறுதியில் ஸ்டார்லிங் சேவை

இந்த மாத இறுதியில் ஸ்டார்லிங்க் தொலைத்தொடர்புச் சேவை நாடு முழுவதும் விஸ்தரிக் கப்படும் என டிஜிற்றல் பொருளாதாரப் பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார். தற்போது பரீட்சார்த்தமாக பத்துப் பேருக்கு ஸ்டார்லிங்க் அலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-25, 6)

## கல்விக் கண்காட்சி வல்வையில் இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 27

வல்வை மகளிர் மகாவித்தியாலத்தில் கல்விக் கண்காட்சி-2025 நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 3 மணிவரை இடம்பெறவுள்ளன.

பாடசாலை அதிபர் திருமதி ஸ்ரீ லஷ்மி சுபேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி செல்வகௌரி சேனாதிராஜா பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். (ச-100)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகக் கிரியை நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்புச்சாத்துதலும், 2ஆம் திகதி புதன்கிழமை காலை 5.54 மணி முதல் 6.56 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளன. அதனைத்தொடர்ந்து மஹா அபிஷேகம், திருவருள் பிரசாதம், அன்னதானம் வழங்கலுடன் மஹா கும்பாபிஷேக நிகழ்வுகள் யாவும் நிறைவுபெறவுள்ளன. தொடர்ந்து 15 தினங்கள் மண்டாலபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ச-41)

## முல்லை–ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரருக்கு கொடியேற்றம்




முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. கொடிச்சீலை கற்சிலைமடுப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் அடுத்தமாதம் 7 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 8 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் சிறப்புற நடைபெறவுள்ளன. (ச-25,19)

## கெஹலியவின் குடும்பம் மீது 40 குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 27

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் குடும்பத்தினருக்கு எதிராக 40 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில், நாட்டுக்குள் தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. மேலதிக விசாரணைகளின் போது, கெஹலியவின் மனைவி, மூன்று மகள்கள் மற்றும் ஒரு மருமகன் ஆகியோருக்கும் இந்த மோசடியில் தொடர்புள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் அடிப்படையிலேயே அவர்களுக்கு எதிராகத் தற்போது 40 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ம-6)



## வடமராட்சியில் வர்த்தகச் சந்தை

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களம் மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் நிதிப் பங்களிப்பில் மாபெரும் வர்த்தகச் சந்தை நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு, போக்கறுப்பில் இடம்பெற்றது. இதன்போது வடமராட்சி கிழக்கு உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் தமது கைவினைப் பொருள்கள், உலர் உணவுகள், மரக்கறிவகைகள், ஆடைகள் என்பவற்றைக் காட்சிப்படுத்தி தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நிகழ்வில் வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி, சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர் கணைச்செல்வன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-27,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

நாம் எவ்வளவு கொடுத்தோம் என்பதிலல்ல. அதை எப்படிக் கொடுத்தோம் என்பதில்தான் பெருந்தன்மை அடங்கியுள்ளது.

— ஒஸ்கார் வைல்ட்

# சலசலப்புகள் தேவையா?

செம்மணிப் புதைக்குழிக்கு நீதிகோரிப் போராட்டம் பேரெழுச்சியாக நடைபெற்று மூன்றாம் நாளின் இறுதிக்கணங்களில் சலசலப்புகளுடன் முடிந்திருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர்ட்ரக் 'யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தபோது நடத்தப்பட்ட இந்தப் போராட்டம் நிச்சயம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்கால நகர்வுகளில் பார்வையில் தாக்கத்தை ஏற்படுத்தும்' என்று நம்பலாம்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அவலங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொள்ளவும்- அந்த அவலங்களுக்குக் காரணமானவர்களைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தவும் மக்களின் தன்னெழுச்சிப் போராட்டங்கள் அவசியமானவை. தமிழ் மக்களுக்கான அனைத்துவழிகளும் அடைக்கப்பட்டிருக்கும்நிலையில் மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்கள் -ஆர்ப்பாட்டங்கள் ஊடாகவே சர்வதேசத்தின் பார்வையைத் தங்கள் பக்கம் திருப்பவேண்டிய தேவை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. துரதிர்ஷ்டவசமாக அவ்வாறான போராட்டங்களை ஒழுங்கமைப்பதில் தமிழ்த் தரப்புகள் கடந்தகாலங்களில் தோல்வியையே சந்தித்திருக்கின்றன. கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டாலும் அவை மக்கள் மயப்படுத்தப்படாமையால் கவனிப்பைப் பெறத் தவறியிருந்தன அல்லது போதுமான தாக்கத்தை ஏற்படுத்தத் தவறியிருந்தன.

இந்த நிலைமைக்கான பொறுப்பை வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ்க்கட்சிகளே ஏற்கவேண்டும். ஓர் இனத்தின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் கோரிக்கைகளை வெளிப்படுத்தும் ஆர்ப்பாட்டங்களில் அரசியல் புகுத்தப்பட்டமையே அந்தப் போராட்டங்களில் இருந்து சாதாரண மக்கள் மெல்லமெல்லத் தள்ளிச் செல்வதற்குப் பிரதான காரணம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. போராட்டங்களில் ஏற்படுத்தப்படும் சலசலப்புகள் அரசியல் சித்து விளையாட்டுகளால் ஏற்பட்ட மனக்கசப்புகள், அதிருப்திகள், விசனங்களால், எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி இனப்பற்றுடன் பங்கெடுப்போரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. 'பொங்கு தமிழ்' போன்ற மக்கள் தன்னெழுச்சிப் போராட்டங்களைத் தற்போது ஒழுங்கமைக்கமுடியாதிருப்பதற்கும் இதுவே காரணமாகியிருக்கின்றது. அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமைக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கும் ஓர் இனம் என்று நோக்கும்போது, இது தமிழ் இனத்துக்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவு என்பது நிதர்சனம்.

இன நலனை முன்னிறுத்தி நடத்தப்படும் போராட்டங்களில் ஏற்படுத்தப்படும் சலசலப்புகளால் சாதகமான விளைவுகள் எவையும் ஏற்படப்போவதில்லை. அவற்றால் போராட்டங்களின் இலக்குகள் தவறவிடப்படுவதுடன் அந்தப் போராட்டங்களுக்கான நோக்கம் மலினப்படுத்தப்படுமேதவிர வேறெதையும் அவை ஏற்படுத்திவிடப்போவதில்லை. ஓர் இனத்தின் நலனுக்காக - அபிலாஷைகளை அடைவதற்காக முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் தனிமனித கோபதாபங்களையும், எதிர்ப்புகளையும் வெளிப்படுத்தும் இடமல்ல என்பதை அனைவரும் புரிந்துகொள்ள முயலவேண்டும். சலசலப்புகளைத் தவிர்த்து அந்தப் போராட்டத்துக்கு திரட்சியை ஏற்படுத்தி, வீரியம் சேர்க்கவே அனைவரும் பாடுபடவேண்டும். அதை உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே மக்கள் மயப்படுத்தப்பட்ட, தன்னெழுச்சியை உருவாக்கமுடியும். அந்தத் தன்னெழுச்சியே தமிழ் இனத்துக்குத் தேவை. அதுவே எம்மை இலக்குகளுக்கு அருகே அழைத்துச்செல்லும். இனியாவது அனைவரும் அதைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.




# அதிகாரிகளின் அசமந்தத்தால் துறைமுகத்தில் ஊர்தி வரிசை!

*கொள்கலன் பாரவூர்திகள் உரிமையாளர் சங்கம் குற்றச்சாட்டு*

**கொழும்பு, ஜூன் 27**

**அதிகாரிகளின் கவனயீனம் காரணமாக கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் பாரவூர்திகள் வரிசையில் காத்திருக்கவேண்டியுள்ளது என்று கொள்கலன் பாரவூர்திகள் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த சில வாரங்களாக கொழும்புத் துறைமுகத்தில் குறிப்பிடத்தக்களவு கொள்கலன் பாரவூர்திகள் வரிசையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. நாளாந்தம் அண்ணளவாக சுமார் 500 வாகனங்கள் இவ்வாறு நிறுத்திவைக்கப்படுகின்றன. துறைமுகத்திலிருந்து சரக்குப் பொருள்களை விடுவிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக மீண்டும் வரிசை ஏற்பட்டுள்ளது.

இடப்பற்றாக்குறை, விடுவிப்பு முனைய அதிகாரிகள் மற்றும் சுங்கப்பிரிவு அதிகாரிகள் உள்ளிட்ட ஏனைய அரச அதிகாரிகளின் பற்றாக்குறை காரணமாக சரக்குப் பொருள்கள் முறையாக விடுவிக்கப்படவில்லை. அமைச்சரவை துணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய அதிகாரிகள் பின்பற்றாமையால் கொள்கலன் பாரவூர்தி சாரதிகள், உரிமையாளர்கள் எனப் பலரும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். அத்தியாவசியப்பொருள்கள் மற்றும் உணவுப்பொருள்கள் இவ்வாறு துறைமுகங்களில் தேங்கிக்கிடப்பதால் காலாவதியாகக்கூடும். நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்துவது அவசியம்-என்றார். (எ-இ)



# தட்டுப்பாடு மருந்துகள் விவரங்களை வெளியிடுக


கொழும்பு, ஜூன் 27

அரச மருத்துவமனைகளில் தட்டுப்பாடாகவுள்ள மருந்துகள் பற்றிய விபரங்களை வெளியிடுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளரைக் கேட்டுக்கொண்டுள்ளது. அரச மருத்துவமனைகளுக்குச் செல்லும் நோயாளிகளுக்கு அரச மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லையெனவும் தனியார் மருந்தகங்களில் கொள்வனவு செய்யுமாறும் பரிந்துரைக்கப்படுவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளையடுத்தே அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது. (ச-41-6)

# 16 சிறையதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, ஜூன் 27

எதிர்வரும் ஜூலை 2 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும்வகையில் 16 சிரேஷ்ட சிறை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இவர்களில் சிறப்புத்தர கண்காணிப்பாளரான ஏ.சி. கஜநாயக்க, போகம்பரைச் சிறைச்சாலையிலிருந்து சிறைச்சாலைத் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளார். சிறப்புத்தர கண்காணிப்பாளரான டி.ஆர்.எஸ். சில்வா, மஹர சிறைச்சாலையிலிருந்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் பதில் கண்காணிப்பாளரான சுதன் ரோஹண, மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச-இ)



# மருந்துகளுக்கான விலை நிர்ணயத்துக்கு குழு நியமிப்பு

கொழும்பு, ஜூன் 27

தனியார் நிறுவனங்கள் இறக்குமதி செய்யும் மருந்துவகைகளுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கென குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக சுகாதாரப் பிரதியமைச்சர் விஜயமுனி தெரிவித்துள்ளார். இதற்கென சட்டவரைபொன்று தயாரிக்கப்பட்டு சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-416)

# துப்பாக்கிச்சூடு; ஒருவர் காயம்

கொழும்பு, ஜூன் 27

அநுராதபுரம் கல்குலமப் பகுதியில் அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்துள்ளது. காயமடைந்தவர் மிஹிந்தலையைச் சேர்ந்த 28 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



நாளை
சனிக்கிழமை - ஆனி 14
28.06.2025
சுபநேரம் : 02.55- 04.25
ராகுகாலம் : 08.55-10.25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணல் கடத்திச்சென்ற டிப்பரை கலைத்துப்பிடித்த பொலிஸார்

### தென்மராட்சியில் அடுத்தடுத்து வேட்டை

கொழும்பு, ஜூன் 27
தென்மராட்சிப் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி மணல் கடத்திச் செல்லும் மணல் மாபியாக்கள், சாவகச்சேரி பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி பாலிதசெனவிரத்னவின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்டுவரும் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல் தடுப்பு பிரிவிரால் மேற்கொள்ளப்பட்டு தொடர் சோதனை வேட்டையில் சிக்கி வருகின்றனர்.
நேற்றுமுன்தினம் பளை பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுமதிப்பத்திரமின்றி மண் ஏற்றிவந்த டிப்பரை பொலிஸார் சோதனையிட முயன்றபோது டிப்பர் தப்பிச் சென்ற முயன்றுள்ளது. இதன்போது 4 கிலோமீற்றர் தூரம் பொலிஸார் துரத்திச் சென்று மட்டுவில் பகுதியில் வைத்து மடக்கிப் பிடித்து சாரதியை கைது செய்துள்ளனர்.
அண்மையில் பளை பிரதேசத்தில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிவந்த டிப்பரை மீசாலை புத்தூர் வீதியின் கனகம்புளியடி சந்தியில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் மடக்கிப்பிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-28)

# மலக்கழிவுகளால் நிறையும் காக்கைதீவு

### மக்கள் அவலம்



யாழ்ப்பாணம், ஜூன் 27
**யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் வயற் காணிகள் மற்றும் வெற்றுக்காணிகளில் இரவுவேளைகளில் இனந்தெரியாத நபர்கள் மலக்கழிவு கள் உட்பட கழிவுகளை பவுசர் வாகனத்தில் கொண்டு வந்து கொட்டிச்செல்வதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் இடர்பாட்டை எதிர்கொண்டுள்ளனர்.**

காக்கைதீவுப் பகுதியை அண்மித்த பகுதிகளில் கொட்டப்படும் இந்தக் கழிவுகளால் சுகாதாரச்சீர் கேடுகளுக்கு அந்தப் பகுதி மக்கள் நாளாந்தம் முகங்கொடுத்து வாழ்ந்துவருகின்றனர்.
அத்துடன் நிலத்தில் கொட்டப்படும் மலக்கழிவுகள் நிலத்தடி நீருடன் கலக்கும் அபாயம் காணப்படுகிறது. மழைகாலங்களில் வெள்ள நீருடன் மலக்கழிவுகள் கலந்து வீட்டு வளவுகளுக்குள் தேங்குகிறது.
இந்த நிலையில் இந்த அநாகரிக செயற்பாடு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரனுக்கு அறிவித்ததை அடுத்து அப்பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர், நிலைமைகளை நேரில் அவதானித்ததுடன், இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பேன் என அப்பகுதி மக்களுக்கு உறுதி அளித்துள்ளார். (ச-26)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 27
யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடரின் 27ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம் பெறவுள்ளது.
சைவப்புலவர், பிரசங்க பூஷணம் க. கைலநாதனின் 'அசுரர்தோற்று படலம்' எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ச-41)



## வீதிகள் துப்புரவாக்கல் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 27
சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட வீதிகள் அனைத்தையும் இயந்திரம்மூலம் துப்புரவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உபநகரபிதா ஞா.கிஷோர் தெரிவித்துள்ளார். கடந்த ஒன்றரை வருடங்களாகத் துப்பரவுசெய்யப்படாமல் பற்றைக் காடாக மாறியுள்ள நகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளே இரண்டு வாரத்துக்குள் துப்புரவாக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார். (ச-28,9)




## விளையாட்டுப்போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27
கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கான வருடாந்த விளையாட்டு விழாவின் மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டிகள் பிரதேச செயலர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றன. (ச-17)

## பெருஞ்சாந்தி விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27
தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேகப்பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதி புதன்கிழமை காலை 5.50மணி முதல் 6.55மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.
அனைவரையும் கலந்து சிறப்பித்து அம்பலவாண முருகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு கும்பாபிஷேக திருப்பணிச் சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற்றது. (ச-25,66)

## 'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27
தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு 'நூறு மலர்கள் மலரட்டும்' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் புத்தக அரங்க விழாவின் 25ஆவது நிகழ்வு இன்று ஆரம்பமாகி 28, 29 ஆம் திகதிகளில் கரவெட்டிப் பிரதேசத்தில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.
நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிகழ்வில் "ஈழத்து நூல்களை அறிவோம்" என்ற தொனிப்பொருளில் நூல்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் யா/தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் நினைவு அரங்கில் இடம்பெறவுள்ளன. நூல்களின் அறிமுக உரைகளான வள்ளியம்மை சுப்பிரமணியத்தின் 'பாட்டி சொன்ன கதைகள்' சிறுவர் இலக்கியம் தொடர்பில் பாடசாலை மாணவன் மகேஸ்வரன் அன்றூவும், புவனா இராஜரட்ணத்தின் 'சிறுவருக்கான வில்லிசை நாடகங்கள்' புத்தகம் தொடர்பாக மன்னார் அகத்திமுறிப்பு அ.மு.க.பாடசாலை அதிபர் த. சுதனும், சோ.தேவராஜாவின் 'வள்ளுவர் வாழ்வியம்' நூல் தொடர்பாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல்நந்தகுமாரும், நந்தன வீரரத்னவின் 'யாழ்ப்பாணத்தை தீயிடுதல்' நூல் தொடர்பாக ஆய்வாளர் சி.விமலனும் உரை ஆற்றவுள்ளதுடன், நிகழ்ச்சித் தொகுப்பினை மாணவர் ஜெகதீஸ்வரன் அபில்சன் மேற்கொள்ளவுள்ளார்.
விசேட கலைநிகழ்வுகளாக செம்முகம் ஆற்றுகைக் குழுவினரின் தயாரிப்பில் சீலனின் எழுத்துரு, நெறியாள்கையில் 'எங்கே எங்கே குடை எங்கே?', 'எலியார் எங்கே போனார்?' ஆகிய சிறுவர் நாடகங்களும் இடம்பெறவுள்ளன. நிகழ்வின் விசேட அம்சமாக மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. முற்றிலும் இலவசமாக இடம்பெறும் நிகழ்வில் ஆர்வலர்கள் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தாயகத்திலுள்ள

# அனைத்துப் புதைகுழிகளும் அகழப்படுவது அவசியம்!

முன்னாள் எம்.பி. சரவணபவன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 27

**செம்மணிப் புதைகுழியென்பது எமக்கு முன்பாக உள்ள ஒற்றைத் தெரிவு மட்டுமே. இதுபோன்ற பல புதைகுழிகள் தமிழர் தாயகத்தில் உள்ளன. எனவே, மனிதம் புதைக்கப்பட்ட அனைத்துப் புதைகுழிகளும் அகழப்படுவது அவசியம் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

உலக வரலாற்றில் யுத்தங்கள் இடம்பெறுதல் என்பது ஒன்றும் புதிய செய்தி கிடையாது. ஆனால் யுத்தங்களுக்கென்று பல்வேறு விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றமை நாம் அனைவரும் அறிந்ததே.

காணாமல் ஆக்கப்படுதல், கடத்தப்படுதல், கடத்தி வன்புணர்வுக்கு உட்படுத்தல், அதன் பின்னர் படுகொலை செய்தல், சாட்சிகளை அழித்தல், அவர்களுடன் தொடர்புடையோரைக் கொல்லுதல் என யுத்தத்தின் மாண்புகளுக்கு அப்பால் மனிதப் படுகொலைக் களங்கள் பலவற்றை இலங்கை யுத்தகளம் கண்டிருக்கின்றது.

தமிழர் வரலாற்றில் என்றும் ஆறாத வடுவாக அது வரலாறு நெடுகிலும் தென்படும். இந்தப் படுகொலைக் களங்களால் பாதிக்கப்பட்டதம் உறவுகளுக்காக நீதிவேண்டிக் குரல் எழுப்புகின்ற உரிமைகூட அச்சுறுத்தல் மிகுந்த சூழலில்தான் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டுவந்தது. இப்போதும்கூட அதே நெருக்குவாரங்கள் கொஞ்சமும் குறைந்தபாடில்லை, ஆனால் வடிவம் மாற்றம் பெற்றிருக்கின்றது.

இனப்படுகொலைகளுடன் நேரடித் தொடர்புடைய மனிதப் படுகுழிகள் எதுவும் வரலாற்றில் மறைக்கப்படாது அனைத்தும் தோண்டப்பட வேண்டும். எமது கண்ணுக்கு முன்னால் இருக்கின்ற செம்மணிப் புதைகுழி வெறும் ஒற்றைச்சான்று மட்டுமே. கடைசி யுத்தத்தின் பெயரால் கொன்றொழிக்கப்பட்டவர்கள் அல்லது கூட்டாகப் படுகொலை செய்யப்பட்டவர்கள் புதைக்கப்பட்ட பல படுகொலைக் களங்கள் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். அவற்றை அடையாளப்படுத்தத்தக்க பல்வேறு சாட்சிகள் இன்னும் நம்மோடு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எனவே முறையான அடையாளப்படுத்தல்களையும் ஆவணப்படுத்தல்களையும் நாங்கள் மேற்கொள்ளவேண்டும். யுத்தத்தின் பெயரால் கொன்றொழிக்கப்பட்ட மக்களின் ஆன்மாக்கள் சாந்தி அடைய அவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதும் அதற்கு பொறுப்புக்கூறக் கடமைப்பட்டவர்களைச் சட்டத்தின் முன்னால் கொண்டுவந்து தண்டனை பெற்றுக் கொடுப்பதும் நாம் செய்ய வேண்டிய கடமையாகும்.

தமிழர் தாயகத்தில் உள்ள அத்தனை புதைகுழிகளும் அகழப்பட வேண்டும். அவற்றைச் சட்டபூர்வமாக அடையாளப்படுத்த ஒரு பொறிமுறையைக் கட்டமைக்கவேண்டும். இளைய தலைமுறை அதில் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்த வேண்டும்-என்றுள்ளது. (ம)

# நயினை அம்மன் ஆலய உற்சவகால ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதால் உற்சவகால ஏற்பாடுகள் தொடர்பில் யாழ். மாவட்ட செயலரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி படகுச்சேவை குறிகாட்டுவான் இறங்கு துறையிலிருந்து உற்சவகாலத்தில் மு.ப 6 மணி தொடக்கம் பி.ப 6 மணி வரை அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை என்ற அடிப்படையில் சேவையில் இடம்பெறும்.

இ.போ.ச. பேருந்துசேவை யாழ்ப்பாண பேருந்து தரிப்பிடத்திலிருந்து மு.ப 5.30 மணி தொடக்கம் படகுச்சேவைக்கமைய சேவையில் ஈடுபடுவதுடன், அரை மணித்தியாலத்துக்கு ஒரு தடவை என்ற அடிப்படையிலும் சேவையில் ஈடுபடும்.

திருவிழாக் காலங்களில் பேருந்து மு.ப. 4.30 மணிக்கு யாழ்ப்பாணப் பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து புறப்படும். அத்துடன் இரவு பேருந்துசேவையானது படகுச்சேவைக்கமைய சேவையில் ஈடுபடும். குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியிலும் அதற்கு முன்னான வீதி ஓரங்களிலும் வாகனங்கள் தரிப்பது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 24ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்குக் கட்டடப் பொருள்கள் வங்களாவடி இறங்குதுறைக்குக் கொண்டுசெல்லப்படலாம். குறிகாட்டுவானிலிருந்து பி.ப 2 மணிக்குப் பின்னர் கட்டடப்பொருள்களை ஏற்றிச்செல்ல அனுமதி வழங்கப்படுவதுடன் இறுதி 4 திருவிழா காலங்களில் கட்டடப்பொருள்கள் எடுத்துச்செல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

அடியார்களுக்கான மதிய மற்றும் இரவு உணவானது அமுதசுரபி அன்னதான சபையினரால் திருவிழா நாள்களில் வழங்கப்படும்.

பொலிஸார் சீருடை மற்றும் சிவில் உடைகளில் கடமையில் ஈடுபடுவார்கள். பொதுமக்கள், அடியார்கள் தங்களது பெறுமதிமிக்க பொருள்களுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவர்.

ஆலய வளாகத்தில் தண்ணீர்ப்பந்தல் அமைக்க விரும்பும் அடியார்கள் மற்றும் பொதுநலன்விரும்பிகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரைத் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-125,27)

# பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் காணிகளைக் கையளியுங்கள்

யாழ்.இராணுவத் தளபதிக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 27

மக்களின் காணிகளை மீளக் கையளிக்கும்போது பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு புதிய யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியிடம் வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் ராசிக குமாரவுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரால் கடந்த ஆண்டு விவசாயத் தேவைக்காக விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளுக்கு அண்மையாக அமைந்துள்ள இராணுவ வேலியை பின்நகர்த்துவதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன்போது அதற்குரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாதபோதிலும் தற்காலிக பின்னரங்க வேலி அமைக்கப்பட்டுவருவதாக ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

மேலும், மக்களிடம் காணிகளை மீளக் கையளிக்கும்போது அங்கு களவுகள் இடம்பெறுவதாக மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர் அதற்கு அமைவான பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் அவற்றைக் கையளிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரினார். (ச)

# பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை முன்னேறவேண்டும்

யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியத்திடம் ஐ.நா.ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை முன்னேற்றம் அடைய வேண்டும். அதற்கு முனைப்புக்காட்ட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் தெரிவித்தாரென யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் தயாபரன் லஜிதர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரைச் சந்தித்து உரையாடியபின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலை சார்ந்த சான்றாதாரங்களை ஐக்கிய நாடுகள் அவைக்குப் பாரப்படுத்தியிருக்கின்றோம். இனப்படுகொலை சார்ந்த விடயங்களை அவர்கள் தொடர்ந்து கண்காணித்துக்கொள்ள வேண்டும். போர் நிறைவடைந்து 16 ஆண்டுகள் கடந்தபொழுதிலும் ஒரு தேசிய இனமாக நாங்கள் தொடர்ச்சியாக அடக்குமுறைக்கு உட்படுகின்றோம். தற்பொழுதுள்ள இலங்கை அரசாங்கத்தின்மீது எமக்கு நம்பிக்கை இல்லை. நில அபகரிப்புகள், சிங்கள-பௌத்த மயமாக்கல், திட்டமிட்ட கைதுகள் என்பன அரங்கேறுகின்றன. இனப்படுகொலைக்கு நீதி கோரி இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்று அவரிடம் எடுத்துரைத்தோம். இதன்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக், இலங்கை பொறுப்புக்கூறலில் முன்னேறவேண்டும். அதற்கு முனைப்புக் காட்டவேண்டும் என்று குறிப்பிட்டார்-என்றார். (ச-125)

## பாசி வளர்ப்புத் திட்டம் யாழில் வெற்றிகரம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாசி வளர்ப்புச் செயற்றிட்டம் சிறப்பானமுறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நெக்டா நிறுவனத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்டக் கடற்றொழில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாசி வளர்ப்புத்திட்டம் சிறப்பானமுறையில் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் 52 திட்டங்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எதிர்வரும் நாள்களில் யாழ்ப்பாணம் பொன்னாலை பகுதியில் இறால் பெருக்கத்தை மேம்படுத்தும் முகமாக இறால் குஞ்சுகளைக் கடலுக்குள் விடவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை

**குறிப்பு:**
**தங்குமிட வசதி உண்டு**

தொடர்பு: **076 578 9372**

## தேவை

கிழுவங்கதியால் தேவை.
விற்பனைக்கு உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 306 8982**

## பெயர் மாற்றம்

ஸ்ரேசன் றோட், சுன்னாகத்தில் வசிக்கும் இரத்தினம் தருமராஜா ஆகிய நான் எனது பெயரை இரத்தினம் சந்திரசேகரம் என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இரத்தினம் சந்திரசேகரம் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கைஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

இரத்தினம் சந்திரசேகரம்

### யாழ்ப்பாணம் மாநகரசபை
### கேள்வி அறிவித்தல்
### நல்லூர் உற்சவகாலத்திற்காக நாட்கூலி அடிப்படையில் தனியார் பாதுகாப்புச் சேவைக்கான கேள்வி கோரல் - 2025

யாழ்ப்பாணம் மாநகரசபையின் 'நல்லூர் உற்சவகாலத்தில் வீதித் தடைகளுக்கான பாதுகாப்பு சேவைக்கு நாட்கூலி அடிப்படையில் தனியார் பாதுகாப்புச் சேவைக்கு' இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்த தகுதிவாய்ந்த விண்ணப்பதாரரிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு தகுதியானவர்கள் கேள்விப் படிவங்களை 27.06.2025 தொடக்கம் 11.07.2025 திகதி மு.ப. 10.00 மணி வரையான காலப்பகுதியில் அலுவலக வேலை நாட்களில் யாழ்ப்பாணம் மாநகரசபை, பெறுகை முகாமைத்துவப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை கடித உறையினுள் உள்ளடக்கி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் (**"நல்லூர் உற்சவ காலத்திற்காக நாட்கூலி அடிப்படையில் தனியார் பாதுகாப்புச் சேவைக்கான கேள்வி கோரல் - 2025"**) எனக் குறிப்பிட்டு **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 11.07.2025 மு.ப. 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரில்/ பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

கேள்விகள் 11.07.2025 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதி நிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**யாழ் மாநகரசபை**

## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 01 . 1953



இறப்பு 25 . 06 . 2025

### செல்லத்தம்பி ரவீந்திரன்
(R.V. TEX , R.S TEX யாழ்ப்பாணம் உரிமையாளர்)

புதிய வீதி ஆறுகால் மடம் ஆணைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்தம்பி ரவீந்திரன் அவர்கள் கடந்த (25.06.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், திலகவதி (பவானி) யின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - ஞானாம்பிகையின் தம்பதியரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னார் பார்த்தீபன் (கனடா), பாமினி (லண்டன்), பிருந்தன், காலஞ்சென்ற சுதாகர், மற்றும் விஜிதா (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாமினி, ராஜ்குமார், ராதா, தாரகா, கரிகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அப்சனா, அபிஷாந், அக்ஷயன், அஸ்மிதன், லெசிகா, டயானிக்கா, சிவாஜினி, கரிராம், கர்சினி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மகேந்திரராஜா, தர்மபாஸ்கரன், உஷாதேவி மற்றும், நகேஸ்வரன், கமலாதேவி, காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் சுதாகரன், சிறிதரன், கெங்காதரன், ஆகியோரின், பாசமிகு சகோதரனும், ஞானரூபன், பிரதீபன், கோகுலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறிய தருகின்றோம்.

**தகவல் - குடும்பத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 14 . 01 . 1928



உதிர்வு 20 . 06 . 2025

### அமரர் திருமதி சின்னையா பூபதி (கனடா)

**(இளைப்பாறிய ஆசிரியை புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயம், அடம்பன் ம.ம வித்தியாலய ஆசிரியரும் மன்/அடம்பன் ம.ம வித்தியாலய முன்னாள் அதிபர் காலஞ்சென்ற சின்னையாவின் மனைவியுமாவார்)**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல புன்னாலைக் கட்டுவன் ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ..! ஓம் சாந்தி ..! ஓம் சாந்தி ..!

**பிரிவால் துயருறும்**
**வாமதேவன் குடும்பம்**
**இலகுநாதன் குடும்பம்**

(CS 58693) E

## 31ம் நாள் நிறைவினிலே



மண்ணில் : 13.02.1945 விண்ணில் : 28.05.2025

### அமரர் குணரத்தினம் கமலாம்பிகை
**(முன்னாள் உபதபாலதிபர், விடத்தற்பளை)**

அம்மா ...! உங்கள்
திருவார்த்தைகள் ஓய்ந்து
ஒரு மாதம் ஆகியதோ - நீங்களின்றி இல்லம்
வெறுமையாகி விட்டதே எமது உள்ளங்களைப் போல...!

எமது அம்மாவின் இழப்பின் துயரில் பங்கெடுத்து.
சகல வழிகளிலும் ஆறுதல் அளித்த அனைத்து
அன்புள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

**ஸ்ரேசன் றோட், பளை**
**தற்போதைய முகவரி:**
**இல. 695/2 நாவலர் வீதி**
**யாழ்ப்பாணம்**

**நீங்கா நினைவுகளுடன்**
**(குடும்பத்தினர்)**
**குணரத்தினம் குணரூபன்**
**கர்ணன் குணதர்சனா**
**முருகதாஸ் குணவித்யா**

(CR 45358) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேசாலையில் விரைவில் துறைமுகம் நிர்மாணம்

## மன்னாரில் கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

**மன்னார், ஜூன் 27**

**மன்னார் மாவட்டத்துக்குரிய துறைமுகம் பேசாலையில் விரைவில் அமையவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து. அவற்றுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கத் தீர்வுகள் எட்டப்பட்டன. கடற்படையினரால் கையகப்படுத்தப் பட்டுள்ள காணிகளை விடுவிப்பது பற்றியும் பேசப்பட்டது. அதற்குரிய நடவடிக்கையை கடற்படையினர் எடுப்பார்கள். மன்னார் மாவட்டத்துக்கென துறைமுகமொன்று கிடையாது. எனவே, பேசாலையில் துறைமுகமொன்றை அமைப்பதற்குத் திட்டமிட்டு. அதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது.

அதேவேளை இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுத்துநிறுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் இந்திய மீனவர்களின் வருகையை முற்றுமுழுதாக நிறுத்தமுடியும் - என்றார். (ச-56)

## குருதிக்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 27

உலக குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். போதனா மருத்துவமனைப் பிராந்திய இரத்த நிலையத்தின் ஏற்பாட்டில். குருதிக்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வு, தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச- 25)

**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிய பணிப்பெண் தேவை

சம்பளம்-30,000/=

தொடர்பு: 077 327 6502

## நாட்டிலிருந்து செவ்வந்தி தப்பிக்க வாய்ப்பில்லை!

கணேமுல்ல சஞ்சீவ கொலை வழக்கில் தேடப்பட்டுவரும் இஷாரா செவ்வந்தி நாட்டைவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார் என்று இதுவரை எந்தத் தகவலும் வெளியாகவில்லை என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தக் கொலை தொடர்பாக குற்றப் புலனாய்வுத்துறை முறையான விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றது. எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி, இஷாரா செவ்வந்தி நாட்டைவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார் என்று தெரியவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகநபரிடம் இருந்த அனைத்துத் தகவல்களும் ஏனைய சந்தேகநபர்கள்மூலம் அறியப்பட்டுள்ளன - என்றார். (எ-இ)

## பொரளையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜூன் 27

பொரளை - டம்பஎக்க வத்தைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலைதுப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளந் தெரியாத இருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலக்குவைக்கப்பட்ட நபர் தாக்குதலின்போது தப்பியோடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கபில!

கொழும்பு, ஜூன் 27

இராணுவத்தின் 67ஆவது தலைமைத் தளபதியாக இலங்கைப் பொறியியலாளர் படையணியைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் கபில டோலேஜ் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்றுமுதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் 66ஆவது தலைமைத் தளபதியாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் கடந்த பெப்ரவரி மாதத்துடன் முடிவடைந்துள்ள நிலையிலேயே, புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் கபில டோலேஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

காலாட்படை படைப்பிரிவின் கேர்னல் மேஜர் ஜெனரல் மனாடா யஹம்பத், இராணுவத்தின் 47ஆவது பிரதித் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். (ம-இ)

## அதிபரை இடமாற்றக் கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஜூன் 27

செட்டிக்குளம் பிரதேசத்துக்குட்பட்ட கணேசபுரம் சண்முகானந்தா வித்தியாலய பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்யக்கோரி மாணவர்கள் மற்றும் பெற்றோரால் ஆர்ப்பாட்டமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பாடசாலை அதிபரை இடமாற்றம் செய்யவேண்டும், உயர்தரப் பாடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். பாடசாலையில் நன்றாகக் கற்பிக்கும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யக்கூடாது என்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்து மாணவர்களின் நலன் கருதி உங்கள் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என வாக்குறுதி வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது. (ச-110)

விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## 15 ஆம் ஆண்டு நினைவு நாள்

**திருமதி சுமங்கலி விவேகானந்தன் (பொன்ரதம்)**



**திதி: 27.06.2025**

பதினைந்து வருடங்கள் கடந்து விட்டன. ஆனாலும் உங்கள் நினைவாக இருக்கிறோம். ஒவ்வொரு செயலும் உங்களை நினைவூட்டுகிறது.


**உங்கள் பிரிவால் வாடும்**

கணவர் விவேகானந்தன்
சகோதர சகோதரிகள், மைத்துனர்கள்,
மருமக்கள், பெறாமக்கள், சித்தி

(CS 3487) E

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 09 . 1940



மறைவு
26 . 06 . 2025

**கணபதி சண்முகநாதன்**
**(முன்னாள் இ.போ.ச நடத்துநர்)**

அராலி வீதி. சங்கானையைப் பிறப்பிடமாகவும். சங்கானை மேற்கு சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சண்முகநாதன் அவர்கள் நேற்று (26.06.2025) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி-லட்சுமி தம்பதியின் அன்பு மகனும். காலஞ்சென்றவர்களான சீனியர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும். பாலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும். காந்தரூபி (ஆசிரியர் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப்பாடசாலை). திருமாறன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும். பார்த்தீபன். நர்மதா ஆகியோரின் அன்பு மாமனாரும். கனிஸ். கிஷோர். அக்ஷறா. அமைறா ஆகியோரின் பேரனும். காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம். இராசரத்தினம். துரைராசா மற்றும் சிவப்பிரகாசம். செல்வராணி. ஜெகராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற்கைதிகளின் விடுதலைக்கு இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள்

## ஐ.நா. ஆணையாளரிடம் குரலற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூன் 27**

**தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை விரைவுபடுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஐ.நா.வின் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளது.**

இதுதொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் தெரிவிக்கையில், ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த வேளை, தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலை தொடர்பான கோரிக்கைகள் உள்ளடங்கிய கடிதம் மற்றும் அவர்களுடைய பெயர் பட்டியலைக் கையளித்திருந்தோம். இதன்மூலம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்ற செய்தியையும் கூறினோம். இந்த அரசானது அரசியற்கைதிகளை விடுவதாக வாக்குறுதி வழங்கி ஆசனமேறியது. ஆனால் இதுவரைக்கும் ஓர் அரசியற்கைதிகூட விடுதலை செய்யப்படவில்லை என்றும் அவரிடம் சுட்டிக்காட்டினோம்- என்றார். (ச-125,27)

# மலையகத்தில் இந்த ஆண்டு 6,000 வீட்டுத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 27

மலையக மக்கள் தொடர்பில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இந்த ஆண்டு 6 ஆயிரம் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. சம்பள அதிகரிப்புக்கான புதிய சட்டத்தை இயற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-


நடைமுறையிலுள்ள ஒப்பந்தத்தின்மூலம் அந்த சம்பள அதிகரிப்பை வழங்கமுடியாது. பெருந்தோட்ட அமைச்சர் என்ற ரீதியில் நானும், ஜனாதிபதியின் பிரதிநிதியாக பிரதி நிதி அமைச்சர் அனில் ஜயந்தவும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பல சுற்றுப் பேச்சுகளை முன்னெடுத்துள்ளோம். அவர்கள் ஆயிரத்து 700 ரூபா சம்பளத்துக்கு இன்னமும் இணக்கம் தெரிவிக்கவில்லை. ஆனால் சில தோட்ட உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். புதிய சட்டத்தின் ஊடாகவேனும் சம்பள அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுப்போம். இந்த ஆண்டுக்குள் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த ஆண்டு 6 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்க எதிர்பார்த்துள்ளோம். எந்தவித அரசியல் தலையீடுகளும் இன்றி இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படும். வீடுகளை நிர்மாணிப்பதற்கு 28 இலட்சமும், அடிப்படை வசதிகளுக்காக 4 இலட்சமும் என ஒரு வீட்டுக்காக 32 இலட்சம் ரூபா ஒதுக்கப்படவுள்ளது - என்றார். (ஏ-இ)

# போதைப்பொருளுடன் வந்த தென்னாபிரிக்கப் பிரஜைக்கு ஆயுள்தண்டனை

கொழும்பு, ஜூன் 27

2021ஆம் ஆண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாகப் போதைப்பொருளை எடுத்துவந்த குற்றச்சாட்டின்கீழ் கைதுசெய்யப்பட்ட தென்னாபிரிக்கப் பிரஜைக்கு நீர்கொழும்பு நீதிமன்றம் ஆயுள்தண்டனை விதித்துள்ளது.

நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கவீந்திர நாணயக்காரவால் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ச-6)




# இலங்கைக்குக் கடத்தப்பட்ட பீடி இலைகள், பீடிகள் மீட்பு

மன்னார், ஜூன் 27

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட ஆயிரத்து 300 கிலோகிராமுக்கும் அதிகமான பீடி இலைகள் மற்றும் 29 ஆயிரத்துக்கும் அதிகமான பீடித் தொகை என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையினரால் மன்னார், நடுக்குடா மற்றும் ஓலைத்தொடுவாய் ஆகிய பிரதேசங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் சந்தேகத்துக்கிடமாக புதரொன்றுக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் அவை மீட்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் பீடிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் மதுவரித் திணைக்கள அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச- 25, 125)



# குழந்தைகளிடையே தொற்றாநோய்கள்

கொழும்பு, ஜூன் 27

நாட்டில் குழந்தைகள் இடையே தொற்றாநோய்கள் அதிகரித்துவருகின்றன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு உட்கொள்ளும் முறைமையே இந்த நிலைமைக்கு வழிவகுத்துள்ளதாக அமைச்சின் ஊட்டச்சத்துப் பிரிவின் பணிப்பாளர் சமூக மருத்துவ நிபுணர் மோனிகா விஜேரத்ன தெரிவித்தார்.

நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட தொற்றாநோய்கள் குழந்தைகளிடையே பரவும் அபாயம் அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# இலஞ்சம் பெற்ற அதிகாரிக்கு 22 வருட சிறைத்தண்டனை

கொழும்பு, ஜூன் 27

2016ஆம் ஆண்டு தம்புத்தேகமப் பிரதேசத்தில் மரம் தறிப்பதற்கு ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின்கீழ் ஓய்வுபெற்ற அரச அதிகாரி ஒருவருக்கு 22 வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தைச் சேர்ந்த 67 வயதான ஒருவருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இலஞ்சம் வழங்கிய நபருக்கு இலஞ்சமாக வழங்கப்பட்ட பணத்தைத் திருப்பிக்கொடுக்குமாறும் உத்தரவிட்ட நீதிமன்றம் ரூ.30,000 அபராதமும் விதித்துள்ளது. (ச-41-6)

# நாவிதன்வெளிப் பிரதேசசபை கைப்பற்றியது தமிழரசு

அம்பாறை, ஜூன் 27

அம்பாறை மாவட்ட நாவிதன்வெளிப் பிரதேசசபையின் புதிய தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் இந்திரன் ரூபசாந்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளிப் பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் 5 உறுப்பினர்களும் சுயேச்சைக் குழுவின் சார்பில் 5 பேரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி சார்பில் தலா 2 பேரும் தேசிய மக்கள் கட்சி சார்பில் ஒருவரும் என 13 பேர் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இந்தநிலையில் பகிரங்க வாக்கெடுப்பின்மூலம் தமிழரசுக்கட்சி சார்பில் புதிய தவிசாளராகப் போட்டியிட்ட இந்திரன் ரூபசாந்தன் தெரிவானார். (ச-இ)



## தற்காப்புக்கலைப் போட்டி

# 30 பதக்கங்களைக் குவித்தது துணுக்காய் விநாயகபுரம் பாடசாலை

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையே வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மல்யுத்தம், யூடோ, தைகொண்டோ போட்டிகளில் துணுக்காய் விநாயகபுரம் அ.த.க பாடசாலை 30 பதக்கங்களைப் பெற்று வரலாற்றுச் சாதனைபடைத்துள்ளது.

இம்மாதம் 22,23,24 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்ட உள்ளக விளையாட்டு அரங்கில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன. இதில் துணுக்காய் விநாயகபுரம் அ.த.க பாடசாலையிலிருந்து பங்குபற்றியோர் 11 தங்கம், 9 வெள்ளி, 10 வெண்கலம் உட்பட 30 பதக்கங்களைப் பெற்று பாடசாலைக்கும் துணுக்காய் வலயத்துக்கும் பெருமையைச் சேர்த்துள்ளார்கள். அத்தோடு பெண்கள் அணியினர் மல்யுத்தப் போட்டியில் மாகாண சம்பியனாகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். (ச-125,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 27

மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வர்த்தகக் கண்காட்சியொன்று இன்று காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

கற்றாழை உற்பத்திகள், தோல்சார் உற்பத்திப் பொருள்கள், கைவினை உற்பத்திப் பொருள்கள், உணவுப் பொருள்கள், ஆடை உற்பத்திகள், கடல்சார் உணவுப் பொருள்கள், சலவை உற்பத்திகள், மட்பாண்ட உற்பத்திப் பொருள்கள் என்பன இதில் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (ம-இ)

## புதையல்...

னர். பொலிஸாருக்கு வழங்கப்பட்ட இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே, அந்தக் குழுவினர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் புதையல் தோண்டிய பகுதி விடுதலைப்புலிகளின் காலத்தில் முகாமாகச் செயற்பட்ட பகுதி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதானவர்களிடம் இருந்து சான்றுப் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-19)

## உள்நாட்டுப்...

ஆணையாளர் வோல்கர் ட்ரக், கடந்த 23ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். தனது பயணத்தின் இறுதிநாளான நேற்று மாலை ஊடகவியலாளர்கள் சந்திப்பையும் நடத்தியிருந்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் காத்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். சமீபத்தில் நான் செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சென்றிருந்தேன். அந்தப் புதைகுழி கடந்த கால ஆட்சியின் கோரத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. அந்தப் புதைகுழியைப் பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பளிக்கப்பட்டதால், இலங்கை அரசாங்கத்துக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன்.

பல நாடுகள் பல ஆண்டுகளாக போர், உள்நாட்டு ஆயுத மோதல்கள் அல்லது அடக்குமுறையை அனுபவித்துள்ளன. சில நாடுகள் உண்மையான நல்லிணக்கத்தை அடைந்துள்ளன. பாதிக்கப்பட்டவர்களின் குரல்கள் மற்றும் உரிமைகள் மீது கவனம் செலுத்தப்படுவது இதற்கு அவசியம். அத்தகைய நடவடிக்கையை நாங்கள் இலங்கையிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

கடந்த காலங்களில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களும் தண்டிக்கப்படுவது அவசியம். நினைத்துப்பார்க்க முடியாத வலியையும் இழப்பையும் சந்தித்த பாதிக்கப்பட்டவர்களின் எதிர்காலத்துக்கு இது இன்றியமையாதது. அரசாங்கம் கொடூரமான குற்றங்களில் ஈடுபட்டவர்களைப்பாதுகாக்க முனையக்கூடாது. எதற்கும் வழிவகுக்காத அல்லது அதன் பரிந்துரைகளை ஒருபோதும் செயற்படுத்தப்படாத ஆணைக்குழுக்கள் மற்றும் விசாரணைகள், பொதுமக்களின் நம்பிக்கையை சிதைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிர்ச்சியை அதிகரிக்கும். நீதி கிடைக்காவிட்டால் அமைதி நிலவமாட்டாது. மாறாக, உண்மையை ஒப்புக்கொள்வதும் ஆற்றுப்படுத்துவதும் மிகவும் அவசியமானது.

இலங்கை ஒரு முக்கிய தருணத்தில் உள்ளது. இது ஒரு புதிய அத்தியாயமாகவும் புதிய வாய்ப்பாகவும் இருக்கலாம். இந்தத் தருணத்தில் இலங்கையின் கைகளில் கண்ணாடியொன்றைநாங்கள் ஒப்படைக்கின்றோம். பல சுயபரிசீலனைகளுக்கு அது அவசியம் - என்றார். (அ-ம-6)

## நவம்பர்...

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 10ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஜூலை மாதம் 21ஆம் திகதிவரை விண்ணப்பிக்க முடியும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic இற்குப் பிரவேசிப்பதனூடாகவும் விண்ணப்பிக்க முடியும்.

2025ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியாது எனவும், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் நீடிக்கப்படாது எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-ச-இ)

## பயங்கரவாதத்...

தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் அரசியற்கைதிகளை விடுவிக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளேன். மேலும், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் இரத்து செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையும் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளை மீண்டும் தொடங்குவது ஒரு நேர்மறையான நடவடிக்கையாக அமைந்துள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் செயற்பாடுகளை அவதானித்துவருகின்றோம் - என்றார். (அ-ம)

## தண்ணீர்த்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இணுவில் மேற்கைச் சேர்ந்த சசிகுமார் ஜீவன்சன் (வயது-20) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தந்தையின் வேலைத்தளத்துக்குச் செல்வதாகக் கூறிவிட்டு தெல்லிப்பழையில் உள்ள குறித்த வீட்டுக்குச் சென்றிருந்த நிலையிலேயே அந்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞருக்கு அடிக்கடி வலிப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-23)

## கிணற்றில்...

உயிரிழந்துள்ளான். அந்தச் சிறுவன் தனது பேரனுடன் தோட்டத்துக்குச் சென்றுள்ளான். பேரன் தோட்டத்துக்கு தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தபோது, அந்தச் சிறுவன் கிணற்றுக்குள் இருந்த வளர்ப்பு மீன்களைப் பிடிக்க முயற்சி செய்தபோதே தவறி வீழ்ந்துள்ளான்.

மீன்களைப் பிடிப்பதற்காக வாளியைப் போட்டபோது, வாளியின் கயிறு சிறுவனின் காலில் சிக்குண்டு அவர் கிணற்றுக்குள் வீழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-23-26)

## கடற்றொழிலுக்குச்...

போயுள்ளார். அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை. நேற்று மாலைவரை அந்த மீனவர் அவதானிக்கப்படாத நிலையில், தேடல் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவந்தன. (அ-ம-113)

## தடம்புரண்டது...

முத்துராஜவெல பகுதியிலிருந்து காங்கேசன்துறை நோக்கி பூநகரி வீதியால் பயணித்த பவுசரே நேற்று அதிகாலை தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. தடம்புரண்ட பவுசரில் 33 ஆயிரம் லீற்றர் டீசல் இருந்தது. பவுசர் விபத்துக்குள்ளானதைத் தொடர்ந்து வழிந்தோடிய டீசலை பொதுமக்கள் முண்டியடித்து போத்தல்களிலும், சிறு கொள்கலன்களிலும் சேகரித்தனர். (அ-ச-17-113)

## நயினை...

பல்லாயிரம் பக்தர்கள் கொடியேற்றத்தில் மிகவும் பக்திபூர்வமாகக் கலந்துகொண்டனர். (அ-ச-27-66-26)

## நாடாளுமன்ற...

செய்யாமல் அரசியலமைப்புக்கு முரணான வகையில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டமை நீதிமன்றத்தின் கவனத்துக்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதையடுத்தே, அவரின் நாடாளுமன்ற உறுப்புரிமை சிக்கலுக்கு உரியதாக மாறியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பதவிவகிப்பதற்கான தகுதியை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அபிநவ நிவஹல் பெரமுனவின் தலைவர் ஓஷல ஹெரத் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா அரச மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டே சமீபத்திய பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுவை சமர்ப்பித்ததாகக் கூறி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அரசுப் பணியில் இருந்து இராஜினாமா செய்யாமல் வேட்புமனுக்களை சமர்ப்பித்தது நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தின் விதிகளை மீறும் செயல் என்ற சட்ட முகாந்திரத்தின் அடிப்படையிலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிபதிகள் மாயாதுன்னே கொரியா மற்றும் மஹேன் கோபல்லவா ஆகியோர் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி என்.கே. அசோக்பரன், எம்.பி அர்ச்சுனா இராமநாதன் பொது அதிகாரியாக இருப்பதால், நாடாளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படவோ, பதவிவகிக்கவோ அரசியலமைப்பு ரீதியாக தகுதியற்றவர் என்று வாதிட்டார். அரசியலமைப்பின் 66(இ) பிரிவை மேற்கோள்காட்டி, எம்.பி.யின் பதவி வறிதாக்கப்படவேண்டும் என்பது அவரின் வாதமாக அமைந்தது.

நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை வழங்கும் வரை அர்ச்சுனா எம்.பி.யாகச் செயற்படுவதற்கு இடைக்காலக் கட்டளையையும் அவர் கோரினார்.

அரச தரப்பில் முன்னிலையான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்தன, எம்.பி அர்ச்சுனா ராமநாதன் இன்னும் ஒரு பொது அதிகாரியாகக் கருதப்படுகிறார் என்பதை உறுதிப்படுத்தினார்.

இதையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர்களின் சமர்ப்பணங்களுக்காக வழக்கு ஜூலை மாதம் 2ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மனுதாரருக்காக சட்டத்தரணி என்.கே. அசோக்பரன் மற்றும் ஷெனல் பெர்னாண்டோ ஆஜராகினர். நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் சார்பாக சேனானி தயாரத்ன மற்றும் நிஷாதி விக்கிரமசிங்க ஆகியோர் முன்னிலையாகினார்கள். (அ-ம-இ)

## செம்மணிப்...

இடம்பெற்றுவரும் மனிதப்புதைகுழியில் நேற்று மேலும் மூன்று மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சித்துப்பாத்தி மயானத்தில் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதி, 'மனிதப் புதைகுழி' என்று நீதிமன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு, தொடர்ச்சியான அகழ்வுக்காக பாதீடும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. நிதி விடுவிப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையில், நேற்றையதினம் அகழ்வுப் பணிகள் மீண்டும் ஆரம்பமாகியிருந்தன.

இதன்படி நேற்றையநாளில் மேலும் மூன்று மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நேற்று அவதானிக்கப்பட்ட மூன்று மனிதச் சிதிலங்களில் ஒன்று சிறு குழந்தையுடையது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, சித்துப்பாத்தி மயானத்தில் இதுவரை அவதானிக்கப்பட்ட மனிதச் சிதிலங்களின் எண்ணிக்கை 22ஆக அதிகரித்துள்ளது.

துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளைக் கண்காணித்துவருகின்றார். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி நிறஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தலைமையிலான குழுவினர் ஆகியோரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிழைக்கப்பட்டால் தண்டனை அவசியமே


### மஹேஷி விசாரணையில் மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

ஜெயவர்த்தனபுர மருத்துவமனையிலிருந்த மருந்துகளைக் கூடுதலான விலைக்கு மூன்றாவது நபர்கள் ஊடாக விற்பனைசெய்த குற்றச்சாட்டின்கீழ் கைதுசெய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் மஹேஷி விஜயரத்னவுக்கு எதிரான விசாரணைகளில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தலையிடமாட்டாது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தலைவர் சமில் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இவ்வாறான தவறான செயற்பாடுகளில் ஈடுபடும் மருத்துவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும். தற்போது மஹேஷி விஜயரத்னவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவும் பொலிஸூம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளன - என்றார். (ச-41-6)



## போதைப்பொருளுக்கு எதிராக சங்கானையில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடக்குப் பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரின் ஏற்பாட்டில், சர்வதேச போதைப்பொருள் ஒழிப்புத் தினத்தை முன்னிட்டு சங்கானைப் பேருந்து நிலையத்துக்கு முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. போராட்டக்காரர்கள் "எம் சமூகத்தை அழிக்கும் மது எமக்குத் தேவைதானா?, அரசே புதிய மதுபானசாலைகளுக்கு அனுமதி வழங்காதே, போதையெனும் சாக்கடையில் விழாதீர்கள்" போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்திக் கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-25,27)

## நகுலேஸ்வரத்தில் மணிக்கோபுர கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கீரிமலை நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தின் புதிய மணிக்கோபுரத்துக்கான கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் காலை 9 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது. புதிய மணிக்கோபுரக் கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன.

அதேவேளை லண்டன் அறக்கட்டளை ஊடாக சிவ அடியார்களின் ஒத்துழைப்புடன் லண்டன் மாநகரிலிருந்து எடுத்து வரப்பட்ட புதிய காண்டாமணி கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. (ச-25,66)

### செம்மணியிலிருந்து வெளியேற்றம்

## அரசியல் முரண்பாடுகளை வைத்து புனிதமான முயற்சிக்குக் களங்கம்!

### சி.வீ.கே.சிவஞானம் கண்டனம்!

எம்முடனான முரண்பாட்டை வைத்து புனிதமான முயற்சியை அசிங்கப்படுத்திய செயலை கட்சி சார்ந்து கண்டிக்கிறேன். இந்த விடயத்தில் நீதி செய்ய வேண்டிய பொறுப்பை மக்களிடம் கையளிக்கிறேன் என இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - செம்மணிப் பகுதியில் இடம்பெற்ற அணையாவிளக்குப் போராட்டத்தில் கலந்துகொள்ளச்சென்ற சி.வீ.கே.சிவஞானம், சில கொந்தளிப்பாளர்களால் களத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். இந்த விடயம் தொடர்பில் நேற்று மாலை செய்தியாளர் சந்திப்பை நடத்தி கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சி.வீ.கே.சிவஞானம் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணி அணையாவிளக்குப் போராட்டம் தொடர்பில் இளைஞர்கள் எடுத்த முயற்சி வரவேற்கத்தக்கது. அந்தப் போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதற்காகவே நாங்கள் அங்கு சென்றிருந்தோம். அதன்போது வேலன் சுவாமி விமர்சித்தார். அதில் என்னை பேச அழைத்தார்கள். நான் திருப்பி ஏதாவது பேசியிருந்தால் அந்தப் போராட்டத்தின் நோக்கம் குழம்பிவிடும் என்பதால் அதனைச் செய்யவில்லை. நேற்றையதினம் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் செம்மணி அணையாவிளக்குப் போராட்டத்துக்கு ஆதரவாக தீப்பந்தப் போராட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நான் செம்மணி அணையாவிளக்குப் போராட்டத்துக்கு சென்றபோது, அங்கு அஞ்சலி செலுத்திவிட்டு மக்களோடு மக்களாக நின்றிருந்தேன். 15 நிமிடங்களுக்குப் பிறகு அமைதியாக நாங்கள் வெளியேறினோம். நான் வெளியேறி வீதியில் சென்று வாகனத்தில் ஏற முற்பட்டபோது சில குரல்கள் எனக்கு எதிராக எழுந்தன. அதனை நான் கருத்தில் கொள்ளவில்லை. பின்னால் சில பேர் சத்தமிட்டனர். அந்தக் காணொலியை நான் அவதானித்த போது என்னைக் குறிவைத்து திட்டமிட்டுப் பேசியதை அவதானிக்கமுடிந்தது.

எமது கட்சிக்கு எதிராக கடந்த நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட காரணத்தால் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்கு அமைய ஒருவரை கட்சியிலிருந்து நீக்கியிருந்தோம். அந்த பழைய குழப்பங்களையே அவர்கள் பேசியிருக்கிறார்கள். நான் சலனம் இல்லாமல் நடந்து சென்றேன். நான் ஓடவில்லை. 'தமிழரசுக்கட்சித்தலைவர் விரட்டியடிக்கப்பட்டார்' என்று செய்தி வந்தது. என்னை யாரும் விரட்டியடிக்கவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் நிமிர்ந்து நிற்கின்ற கட்சி என்ற வகையில் தமிழரசுக் கட்சிக்குப் பொறுப்பு இருக்கிறது. அந்த கடமையைச் செய்வதற்காக நாம் போயிருந்தோம். வீதியில் சென்றால் நாய்கள் குலைப்பது வழமை. நான் அதே எண்ணத்திலேயே சென்றேன். இந்தப் போராட்டத்துக்காக ஏற்பாட்டாளர்கள் பல முயற்சிகளை எடுத்தார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். காணாமற்போனோர் விடயங்களை ஆரம்பம் முதல் கையாள்கின்ற தரப்பு என்ற அடிப்படையில் அந்த இடத்தில் நிற்பதற்கு எனக்கும் கட்சிக்கும் உரிமையுள்ளது - என்றார். (ம-26)

## வலி.மேற்கில் ஆதனங்கள் மீள் மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜூன் 27

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட ஆதனங்களை மீள் மதிப்பீடு செய்யும் பணி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது என்று பிரதேச சபை தவிசாளர் ச. ஜயந்தன் தெரிவித்துள்ளார். சங்கானை உப அலுவலகத்துக்குட்பட்ட ஆதனங்கள் மீள்மதிப்பிடும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டது.

இன்று வட்டுக்கோட்டை மற்றும் சுழிபுரம் உப அலுவலகத்துக்குட்பட்ட ஆதங்களின் மீள்மதிப்பீட்டுப் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. மீள்மதிப்பீட்டுப் பணிக்கு பொதுமக்களை ஒத்துழைப்பை வழங்குமாறும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-125)

## சாவகச்சேரி மருத்துவமனையின் குறைபாடுகளை முறையிடலாம்

சாவகச்சேரி, ஜூன் 27

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் குறைபாடுகள் காணப்படின் முறைப்பாடு செய்யுமாறு மருத்துவமனைப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

மருத்துவ அத்தியட்சகரின் 0772009795 எனும் தொலைபேசி இலக்கத்துக்கும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் 0718081374 எனும் தொலைபேசி இலக்கத்துக்கும் தொடர்பு கொண்டு முறையிடலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-25,9)

**காசாளர்கள் தேவை**

நல்லூர், நெல்லியடியில் அமைந்துள்ள பிரபல புடவைக்கடையொன்றிற்கு காசாளர்கள் தேவை.

- ஆண், பெண் இருபாலரும் விரும்பத்தக்கது
- நல்லூர், நெல்லியடியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது

தொடர்பு: 077 079 6776

(CS 58694) E

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.